RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22499

OPEN ACCESS

# நற்றிணையில் பெண்கள்

## த. மேபல் ராணி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,திருநெல்வேலி - 627012) தொலையாவட்டம் - 629 157, தமிழ்நாடு, இந்தியா

# Womens in Nattrinai

## T. Mabel Rani [a, *]

[a] Department of Tamil, Annai Velankanni College, (Manonaniam Sundarnar University, Tirunelveli-627012), Tholayavattam-629157, India

* Corresponding Author: mabelraniavc@gmail.com

Received: 23-03-2022
Revised: 18-09-2022
Accepted: 01-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Sangam literature reflects the lifestyle of people during the Sangam period. Among the Sangam literatures, the Eight Anthologies (Ettuthogai), the most important one is the "Nattrinai". This is an "Akam" (love) themed book. It portrays women in various situations, according to their character and well-being. This paper explores how the "Nattrinai" describes the greatness of the hero, who is superior in wealth and fame, and how the heroine is depicted as a beautiful woman who captivates the hero's heart. It also shows how she participates in secret love affairs with the hero and later accompanies him on a journey through the desert. Additionally, it portrays the unwavering love of the heroine for the hero and her non malicious attitude towards others.

**Keywords:** Sangam literature, Nattrinai, Akam, Heroine

## முன்னுரை

சங்ககால மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிப்பவைச் சங்க இலக்கியங்கள். இவ்விலக்கியங்கள் சொல்வளமும் பொருள் வளமும் நிறைந்து காணப்படுகிறது. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை நூல்களுள் முதன்மையானது நற்றிணை. இது அகம் சார்ந்த நூல் ஆகும். சங்ககால பெண்கள் வீரத்தில் சிறந்த பெண்களாகவே இலக்கியங்களில் சித்திரிக்கப்பட்டுள்ளனர். பிறரைப் பாராட்டுகிறவர்களாகவோ, துணிச்சலுடனோ, வருணனைக்காகவோ சமுதாய சூழலுக்கேற்ப பெண் இலக்கியத்தில் கையாளப்படுகிறாள். சங்க இலக்கியமான நற்றிணையில் பெண்கள் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெண்ணியம்

பெண்களின் அடிப்படை உரிமைகளை மீட்டெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு உலகளாவிய அமைப்பு பெண்ணியம் ஆகும். ஆங்கிலத்தில் 'பெமினிசம்' என்று வழங்கும் சொல்லையே தமிழில் 'பெண்ணியம்' என்று கூறுகிறோம். 'பெமினிசம்' என்ற சொல்லின் மூலச்சொல்லாக 'பெமினோ' என்ற இலத்தீன் மொழிச் சொல் காணப்படுகிறது. பெமினிசம் என்பதற்கு பெண்களின் உரிமையை வற்புறுத்தும் ஓர் இயக்கம் என்று டீலக்ஸ் ஆங்கில தமிழ்

பேரகராதி விளக்கம் தந்துள்ளது. பெண்ணின் உரிமைகளையும் சிக்கல்களையும் முன்னிலைப்படுத்தும் அமைப்பாக பெண்ணியம் திகழ்கிறது "எல்லா தரப்பு பெண்களுக்கும் உரிமை பெற்று தருவதே பெண்ணியம்"(ரெங்கம்மாள் இரா.ப.27) என்று பார்பாரா ஸ்மித் என்பவர் கூறியுள்ளார்.

## நற்றிணையில் பெண்களின் நிலை

எட்டுத்தொகை நூல்களுள் அகம் சார்ந்த நூல் நற்றிணை. இது பெண்ணை அவள் பண்பு நலனுக்கு ஏற்ப பல்வேறு நிலைகளில் சித்தரிக்கிறது. பிறரை பாராட்டுபவளாகவும், அழகுடையவளாகவும், புகழுரைக்கு தகுதியுடையவளாகவும், அச்சத்தில் உழற்றுபவளாகவும், சிரம் மற்றும் ஆற்றிடை அச்சமுடையவளாகவும் அன்பில் உறுதியுடையவளாகவும், தீங்கு நினையாதவளாகவும், ஆராயும் அறிவுடையவளாகவும் நற்றிணையில் பெண்களின் நிலை காணப்படுகிறது.

## பாராட்டும் குணமுடையவர்

பாராட்டு என்பது மனிதனின் நற்குணங்களில் ஒன்று. ஒவ்வொரு மனிதனும் தான் பாராட்டப்பட வேண்டும் என்றே விரும்புகிறான். ஒரு செயலை செய்பவனை பாராட்டும் போது அவன் அச்செயலை இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு முயற்சி செய்வான். பெற்றோர் தம் பிள்ளைகளையும், மனைவி தன் கணவனையும், ஆசிரியர் தன் மாணவனையும் பாராட்ட வோண்டும்.

"நின்ற சொல்லா்: நீடுதோறு இனியர்

என்றும் என் தோள் பிரிவு அறியலரே" (பாலசுப்ரமணியன் கு.வெ, பா-1)

என்னும் நற்றிணை பாடல் பொருள்வயிற் பிரிய எண்ணும் தலைவனின் பெருமையை தலைவி பாராட்டுவதாக அமைந்துள்ளளது. தம் காதலர் உண்மையானவர், அன்பானவர், எனது தோளை எப்போதும் விட்டு பிரிய எண்ணவே மாட்டார். அத்தகையவனின் நட்பு சந்தன மரத்தின் உச்சியில் கொண்டு சென்று வைக்கும் தேனைப் போன்று உறுதியானது என்றும் தண்ணீர் இல்லாமல் இவ்வுலகம் அமையாது அதுபோல அவர் இல்லாமல் நான் இல்லை என்று தலைவனின் பெருமையைத் தலைவி பாராட்டிக் கூறுகிறாள்.

## அழகுடையவள்

அழகு என்பது பார்ப்பவர் கண்களில் உள்ளது. ஒரு பெண் எவ்வளவு அடக்க ஒடுக்கமாக பக்குவமாக நடந்து கொள்கிறாளோ அங்கே தான் அவளது பெண்மை வெளிப்படுகிறது. பெண்களின் அகம், முகம், செயல், வாக்கு இவற்றின் அழகே அவளின் புன்னகையில் வெளிப்படுகிறது.

"அல்கு படர் உழந்த அரி மதர் மழைக்கண்

பல் பூம் பகைத் தழை நுடங்கும் அல்குல்

திருமணி புரையும் மேனி மடவோள்" (பாலசுப்ரமணியன் கு.வெ, பா-8)

என்ற நற்றிணை பாடல் தலைவியைக் கண்ட தலைவன் அவளின் அழகினில் மயங்கி வருணித்துக் கூறுவதாக அமைந்துள்ளது. மிகத் துன்பம் அடைந்த செவ்விய கோடுகள் படர்ந்த வளப்பமும் குளிர்ச்சியும் உடையது கண்கள். பல பூக்களால் மாறுபடத் தொகுக்கப்பட்ட மெல்லிய ஆடை அசைய உரித்த அல்குல் அழகிய நீலமணி போன்ற மேனியை உடையவள் என்று தலைவியின் அழகைத் தலைவன் வருணித்துக் கூறுகிறான்.

## உடன்போக்கு செல்லுதல்

சங்க இலக்கியங்கள் காதல், மணவாழ்க்கை மற்றும் உறவு சூழ்நிலைகளில் தலைவி தலைவனுடன் உடன்போக்கு செல்வது குறித்து எடுத்துரைக்கின்றது.

“நின்ற வேனில் உலர்ந்த காந்தள்

அழல் அவிர் நீன் இடை, நிழல்டம் பெறாஅது,

ஈன்று கான் மடிந்த பிணவுப் பசி கூர்ந்தென…” (பாலசுப்ரமணியன் கு.வெ, பா-29)

என்னும் பாடலடிகள் தலைவி தலைவனுடன் பாலை நிலம் வழியாகச் உடன்போக்கு செல்வதை எடுத்துரைக்கின்றது. தலைவி தலைவனுடன் சென்ற பாலை நிலத்தில் கோடை காலத்தை தவிர பிற பருவம் ஒன்று வரவே வராது. அங்கு குட்டிகளை ஈன்ற பெண்புலி பசியுடன் இருக்கும் என்று காட்டில் காவல் செய்திருந்த ஆண்புலி அதன் பசியைப் போக்க மாலைப் பொழுதில் வழியினிடையில் செல்வாரைக் கொல்லும் பொருட்டு காத்து நிற்கும் அப்படிப்பட்ட கொடிய பாலை வழியாக தலைவி தலைவனுடன் உடன்போக்கு சென்றிருக்கிறாள் என்று செவிலித்தாய் வருந்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

## தலைவனை எண்ணி அச்சம் கொள்ளுதல்

சங்க இலக்கிய அகப்பாடல்களில் தலைவன் தலைவி களவில் ஈடுபடும் காலத்தில் தலைவனும் தலைவியும் பகற்குறி, இரவுக்குறியில் சந்திப்பதாகவும் இரவு பொழுதில் தலைவன் வருகையில் வழியில் துன்பம் நேருமோ என தலைவி வருந்துவது போன்ற பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

"யாங்கு செய்வாம்கொல் - தோழி! ஓங்கு கழைக்

காம்புடை விடர் அகம் சிலம்ப, பாம்பு உடன்று

ஓங்க வரை மிளிர ஆட்டி, வீங்கு செலல்” (பாலசுப்ரமணியன் கு.வெ, பா-57)

என்னும் பாடலடிகள் தலைமகன் இரவுப் பொழுதில் வருகையில் வழியில் நேரும் துன்பங்களை நினைத்து தலைவி வருந்துவதை எடுத்துரைக்கின்றது. உயர்ந்த அடிப்பகுதியையுடைய மூங்கில்கள் நிரம்பிய மலைப் பிளவுகள், அவ்விடங்களில் மேகம் இடித்து எதிரொலிக்கும் ஒலியைக் கேட்டு பாம்புகள் அச்சமடையும். உயர்ந்த பாறைகளில் புரண்டு வருந்தும் இயல்புடைய மேகங்கள் மிகுதியாக துளிகளைச் சிதறி மழை பெய்யத் தொடங்கின. இதனால் ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இத்தகைய வழியில் வரும் தலைவனுக்கு நேரும் துன்பங்களை நினைத்தால் அச்சமாக உள்ளது என தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

## அன்பில் உறுதியுடையவள்

அன்பு என்பது உணர்ச்சி மற்றும் மனநிலை சார்ந்த பல்வேறு வகையான உணர்வுகளையும் அனுபவத்தையும் குறிப்பதாகும். மனித நேயம், இரக்கம், பாசம் ஆகியவற்றைக் குறிக்கும் நல்லொழுக்கமே அன்பு எனப்படுகிறது. வள்ளுவரும் உலகத்தில் இன்பமாக வாழ்பவர் பெறும் சிறப்புகளுக்கு எல்லாம் காரணம் அவர்கள் அன்பு செய்து வாழும் வாழ்க்கையே என்று கூறுகிறார். இதனை,

"அன்புற்று அமைந்த வழக்கு என்ப வையகத்து

இன்புற்றார் எய்தும் சிறப்பு” (குறள்-75)

என்னும் குறள் எடுத்துரைக்கின்றது.

மலர்கள் விளங்கும் பொழில்களையும் இனிய கடுப்புடைய கள்ளுணவையும் இழையணிந்த நெடிய தேர்களையும் உடைய வலிமை மிக்கவர் சோழ மன்னர். இச்சோழ மன்னர் 'போஒர்' என்னும் ஊரின் தலைவனாகிய பழையன் என்னும் படைத்தலைவனிடம் தப்பாத வேற்படையைப் போல தப்பாத உன்னுடைய நல்ல சொல்லைக் கேட்டு உண்மையெனத் தெளிந்து அவளுடைய அன்பில் உறுதியுடையவளாக இருக்கிறாள். அதுபோல நீயும் அவளுடைய நெடுங்கூந்தலில் நரை முடிக்கப்பெற்றாலும் அவளை கைவிடாமல் இருக்கக் கூறுவதாக.

“அண்ணாந்து ஏந்திய வன முலை தளரினும்

பொன் நேர் மேனி மணியின் தாழ்ந்த

நல் நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்

நீத்தல் ஓம்புமதி” (பாலசுப்ரமணியன். கு. வெ. பா-10)

என்னும் நற்றிணை பாடல் அமைந்துள்ளது.

## பிறருக்கு தீங்கு நினையாதாள்

பெண்கள் வெள்ளை உள்ளம் கொண்டவர்கள் எதிரிக்கு கூட தீங்கு நினையாதவர்கள். சங்க இலக்கியங்களில் பெண்களின் நடையினை சிறப்பித்து கூறும் போது ஒரு ஈ எறும்புக்கு கூட தீங்கு விளைவிக்காதபடி நடக்கும் மென்மையான நடையினை உடையவர்கள் பெண்கள் என கூறப்பட்டுள்ளது.

“அரி அமை சிலம்பு கழீஇ, பல் மான்

வரிபுனை பந்தொடு வைஇய செல்வோள்

இவை காண்தோறும் நோவர் மாதோ” ( பாலசுப்ரமணியன். கு. வெ. பா-12)

என்னும் பாடலடிகள் தலைமகள் தனது தோழியரை நினைத்து வருந்த தலைவனுடன் செல்லவிருந்த உடன்போக்கை தவிர்த்தமையை எடுத்துரைக்கின்றது.

தலைவி தலைவனுடன் செல்வதற்கு என்று தயாராக தன் உடம்பு பிறருக்கு தெரியாதபடி மறைத்து தன் காலில் அணியும் பருக்கைக் கல் போட்டு நிரப்பப் பெற்ற சிலம்பைக் கழற்றினாள். கழற்றிய சிலம்பை பல மாட்சிமைப் பட்ட வரிந்து புனைந்த பந்தோடு ஒரு சேர வைக்கச் சென்றாள். இதைப் பார்க்கும் போது என் தோழியர்கள் வருந்துவார்களே என நினைத்து தலைவனுடன் செல்வதைத் தவிர்க்கிறாள். இதிலிருந்து பெண்கள் பிறருக்கு தீங்கு நினையாதவர்கள் என்பது புலப்படுகிறது.

## முடிவுரை

சங்ககால பெண்கள் வீரமுடையவர்களாகவே இலக்கியங்கள் சித்திரிக்கின்றன. நற்றிணையில் பெண்கள் பொருள்வயிற் பிரிய எண்ணும் தலைவனின் பெருமையை பாராட்டுபவளாகவும், தலைவன் பார்த்து மயங்கும்படியான அழகுடையவளாகவும், தலைவனுடன் களவில் ஈடுபட்டு பின் பாலை நிலம் வழியாக உடன்போக்கு செல்பவளாகவும் தலைவன் மீது அன்பில் உறுதியுடையவளாகவும், பிறகுக்கு தீங்கு நினையாதவளாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளாள் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகின்றது.

## References

Balasubramanian (2013) Nattrinai Mulamum Vuraiyum, New Century Book House, Pvt.ltd, Chennai

Murugan (2022) Thirukkural Thiranavukol, New Century Book House Pvt.ltd. Chennai.

Saaraa Kaampil (2021) Penniam Varalarum Kotpadugal, New Century Book House Pvt.ltd, Chennai

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License